***DEPOSITION OF WITNESS***

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

- - - - -

## *IN THE COURT OF SESSIONS,*
## *MAHALIR NEETHIMANDRAM, MADURAI.*

| | | |
|---|---|---|
| *Case No.* | : | *SC No. 596 / 2018* |
| *Deposition of witness for* | : | *PW : 4* |
| *Name* | : | திரு. அழகர்சாமி |
| *Father's Husband's Name* | : | |
| *Village* | : | |
| *Taluk* | : | |
| *Caste* | : | |
| *Calling* | : | |
| *Religion* | : | |
| *Age* | : | |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of* ***22.04.2025***

எதிரி *1* முதல் *3, 5,6* ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் மேலூர் தாலுகா, சருகுவளையபட்டியில் குடியிருந்து வருகிறேன். எதிரிகள் அனைவரும் என் உறவினர்கள் மற்றும் பக்கத்து பக்கத்து ஊரைச் சார்ந்தவர்கள். நான் வியாபாரம் செய்து வருகிறேன். வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. நான் காலையில் சந்தைக்குப் போய்விட்டு, இரவு 08.00 மணிக்கு மேல் தான் வீட்டிற்கு வருவேன். தமிழ் என்பவரை எனக்குத் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

போலிசார் விசாரணையின் போது, 1வது எதிரிக்கும் தமிழ் என்பவருக்கும் திருமணமாகி 13 வருங்கள் ஆனது என்றும், திருமணமான நாளிலிருந்தே தமிழின் நடவடிக்கை சரியில்லை என்றும், பல ஆண்களுடன் கள்ளத்தொடர்பு வைத்திருந்தார் என்றும், இது சாமிக்கண்ணிற்கு தெரிந்து பஞ்சாயத்து வைத்ததாகவும், ஒழுங்காக இருப்பதாக சொல்லி தமிழிடம் எழுதி வாங்கிக்கொண்டு வாழ்ந்தார்கள் என்றும், அதன்பிறகு சாமிக்கண்ணு வெளிநாடு போய்விட்டார் என்றும், வெளிநாடு போனதில் இருந்து தமிழ் ரொம்பவும் கெட்டுப்போய்விட்டார், அதனால் மறுபடியும் பஞ்சாயத்துவைத்து பேசி தமிழை தீர்த்து விட்டதாகவும், அதன் பின்னர் அவரது அப்பா வீட்டில் வாழ்ந்து வந்ததாகவும், அவர் பிள்ளைகளை பிட்டர் கண்ணன்தான் வளர்த்து வந்தார் என்றும், தமிழ் தினமும் டீக்காக உடை உடுத்திக்கொண்டு, காலையில் பஸ் ஏறி மேலூர் பக்கம் போய்விட்டு, இரவு 10 மணி வண்டிக்குத்தான் வீட்டிற்கு வருவார் என்றும், சில நாட்கள் வீட்டிற்கு வரமாட்டார் என்றும், அவரது வீடு ஊருக்கு கடைசியாக ஒதுக்குபுறமாக இருந்ததால், யாரும் கண்டுகொள்ளமாட்டார்கள் என்றும், தமிழுக்கு யாரும் அறிவுரை கூறமுடியாது என்றும், சொன்னவரை அடித்து பேசிவிடுவார் என்றும், வீட்டிற்கு வந்து யாரும் வண்டியில் கூட்டி போவார்கள், அதை ஊரில் யாரும் கண்டுகொள்ளமாட்டார்கள் என்றும், 2006ம் ஆண்டு சாமிக்கண்ணு ஊருக்கு திரும்பி வந்து வேறு திருமணம் முடித்துக்கொண்டார் என்றும், அது சம்பந்தமாக தமிழ் போலீசில் கேஸ் கொடுத்தாக பேசிக்கொண்டதாகவும், 13.10.2006க்கு முன்பு ஒரு வார காலமாக தமிழை காணவில்லை என்று ஊரில் பேசிக்கொண்டார்கள்

என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சருகுவலையபட்டியை சேர்ந்தவன், சாமிக்கண்ணு, பிட்டர் கண்ணன், மணிமேகலை ஒத்தப்பட்டியைச் சேர்ந்தவர், துரை, மணிவண்ணன் பக்கத்து பக்கத்து கிராமம். எதிரிகள் எனது உறவினர்கள் என்றும் அதனால் எதிரிகளை குற்ற வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை

*DEPOSITION OF WITNESS*
*(Chapter XXIII Code of Criminal Procedure)*
*- - - - -*

## *IN THE COURT OF SESSIONS,*
## *MAHALIR NEETHIMANDRAM, MADURAI.*

| | | |
|---|---|---|
| *Case No.* | : | *SC No. 596 / 2018* |
| *Deposition of witness for* | : | *PW : 5* |
| *Name* | : | திருமதி. ராசி |
| *Father's Husband's Name* | : | |
| *Village* | : | |
| *Taluk* | : | |
| *Caste* | : | |
| *Calling* | : | |
| *Religion* | : | |
| *Age* | : | |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of* ***22.04.2025***

எதிரி *1* முதல் *3, 5,6* ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் மேலூர் தாலுகா, சருகுவளையபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பள்ளி சென்று படிக்கவில்லை. கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். இறந்து போன தமிழ் என்பவரைத் தெரியும். அவர் 1 வது எதிரியின் மனைவி. சுமார் 10,12 வருடங்களுக்கு முன்பு, 1 வது எதிரிக்கும் அவரது மனைவிக்கும் எங்கள் கிராமத்தில் பஞ்சாயத்து நடந்தது. ஊர் மந்தை சருகுவளையபட்டியில் உள்ளதால் அங்கு வைத்து பஞ்சாயத்து நடந்தது. நான் மந்தை வழியாக வேலைக்குச் செல்லும் போது, பஞ்சாயத்து நடந்தை ஓரக்கண்ணால் பார்த்துவிட்டு வேலைக்குப் போய்விட்டேன். அதன் பிறகு என்ன நடந்தது ஏது நடந்தது என்று எனக்கு எதுவும் தெரியாது. தமிழ்

இப்போது இல்லை. என்ன ஆனது என்று எனக்குத் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

போலிசார் விசாரணையின் போது, 1 வது எதிரிக்கும் தமிழ் என்பவருக்கும் திருமணமாகி 13 வருங்கள் ஆனது என்றும், திருமணமான நாளிலிருந்தே தமிழின் நடவடிக்கை சரியில்லை என்றும், பல ஆண்களுடன் கள்ளத்தொடர்பு வைத்திருந்தார் என்றும், இது சாமிக்கண்ணிற்கு தெரிந்து பஞ்சாயத்து வைத்ததாகவும், ஒழுங்காக இருப்பதாக சொல்லி தமிழிடம் எழுதி வாங்கிக்கொண்டு வாழ்ந்தார்கள் என்றும், அதன்பிறகு சாமிக்கண்ணு வெளிநாடு போய்விட்டார் என்றும், வெளிநாடு போனதில் இருந்து தமிழ் ரொம்பவும் கெட்டுப்போய்விட்டார், அதனால் மறுபடியும் பஞ்சாயத்துவைத்து பேசி தமிழை தீர்த்து விட்டதாகவும், அதன் பின்னர் அவரது அப்பா வீட்டில் வாழ்ந்து வந்ததாகவும், அவர் பிள்ளைகளை பிட்டர் கண்ணன்தான் வளர்த்து வந்தார் என்றும், தமிழ் தினமும் டீக்காக உடை உடுத்திக்கொண்டு, காலையில் பஸ் ஏறி மேலூர் பக்கம் போய்விட்டு, இரவு 10 மணி வண்டிக்குத்தான் வீட்டிற்கு வருவார் என்றும், சில நாட்கள் வீட்டிற்கு வரமாட்டார் என்றும், அவரது வீடு ஊருக்கு கடைசியாக ஒதுக்குபுறமாக இருந்ததால், யாரும் கண்டுகொள்ளமாட்டார்கள் என்றும், தமிழுக்கு யாரும் அறிவுரை

கூறமுடியாது என்றும், சொன்னவரை அடித்து பேசிவிடுவார் என்றும், வீட்டிற்கு வந்து யாரும் வண்டியில் கூட்டி போவார்கள், அதை ஊரில் யாரும் கண்டுகொள்ளமாட்டார்கள் என்றும், 2006 ம் ஆண்டு சாமிக்கண்ணு ஊருக்கு திரும்பி வந்து வேறு திருமணம் முடித்துக்கொண்டார் என்றும், அது சம்பந்தமாக தமிழ் போலீசில் கேஸ் கொடுத்தாக பேசிக்கொண்டதாகவும், 13.10.2006 க்கு முன்பு ஒரு வார காலமாக தமிழை காணவில்லை என்று ஊரில் பேசிக்கொண்டார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சருகுவலையப்பட்டியை சேர்ந்தவன், சாமிக்கண்ணு, பிட்டர் கண்ணன், மணிமேகலை ஒத்தப்பட்டியைச் சேர்ந்தவர், துரை, மணிவண்ணன் பக்கத்து பக்கத்து கிராமம். எதிரிகள் எனது பக்கத்து ஊர்க்காரர்கள் என்றும் அதனால் எதிரிகளை குற்ற வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை